1990 ஆகஸ்டு 22]

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவரவர்களே, சேலம் உருக்காலை குறித்த மதிப்பீட்டினுடைய விவரங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே தற்போது இல்லை என்று கூறிவிட்டார்கள். ஆனால் அந்த உருக்காலை அமைந்திருக்கிற இடமும், சேலம் மாக்னசைட் அமைந்திருக்கிற இடமும் ஏறக்குறைய 9,000 ஏக்கர் வக்ஃபுக்குச் சொந்தமான நிலம் என்பதை அரசு அறியும். எனவே, அந்த நஷ்ட ஈட்டையும் சேர்த்து மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி என்றால் இதுவரையிலே எவ்வளவு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று இந்த அரசு, மத்திய அரசோடு கலந்து முடிவு செய்திருக்கிறது? அப்படி இல்லை என்றால் அந்த 9,000 ஏக்கருக்கும் நஷ்ட ஈடு பெற்றுத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, எனக்கு இதிலே உள்ள மன வருத்தம் என்னவென்றால், நம்முடைய நண்பர் லத்தீப் அவர்கள் வக்ஃபு போர்டு தலைவராகிப் பல மாதங்கள் ஆகின்றன. இந்த விவரத்தை இதுவரையிலே என்னிடத்திலே சொல்லவில்லை. அரசுக்கும் எழுதவில்லை. எழுதியிருப்பாரேயானால், இதைப்பற்றிக் கேட்டு இன்றைக்கு விளக்கமாகப் பதில் அளித்திருக்க எனக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

காவல் நிலையம் அமைத்தல்.

*2264—திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஸ்ரீவைகுண்டம் தாலுகா செக்காரக்குடி கிராமத்தில் காவல் நிலையம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள திருவைகுண்டம் தாலுகா செக்காரக்குடி கிராமத்தில் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செக்காரக்குடி கிராமத்தைப் பொறுத்தமட்டிலே கிட்டத்தட்ட 10,000 மக்கள் தொகையைக் கொண்ட மிகப் பெரிய கிராமம். அதோடு அந்தக் கிராமத்தைச் சுற்றிலும் இருக்கின்ற கிராம மக்களும், செக்காரக்குடி மக்களும் கிட்டத்தட்ட 10 கிலோ மீட்டருக்கு மேல் நடந்து சென்று, மேலத்

தட்டாப்பாறையிலே இருக்கின்ற காவல் நிலையத்திற்கும், மணியாச்சியிலே இருக்கின்ற காவல் நிலையத்திற்கும் சென்று புகார் கொடுக்கவேண்டிய நிலையிலே உள்ளனர். அதோடு மாத்திரமல்லாமல், இந்தக் கிராமங்களுக்கிடையே பஸ் வசதியும் கிடையாது. ஆகவே செக்காரக்குடி கிராமத்தை யும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களையும் இணைத்து, செக்காரக்குடியிலே ஒரு காவல் நிலையம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9-15 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் பல காவல் நிலையங்கள் நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டு, அவை தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. காவல் நிலையங்களைத் தொடங்குவதற்கு சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளில் ஒன்றாக, சட்டமன்ற உறுப்பினருடைய வேண்டுகோளும் இணைக்கப்பட்டிருக்கிறது. எனவே, வேண்டுகோள் புறக்கணிக்கப்படமாட்டாது.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செக்காரக்குடி கிராமத்தில் ஒரு புறநகர் காவல் நிலையமாவது அமைப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கா காவல் நிலையமே வேண்டுமென்று கேட்டுவிட்டு, வேண்டுகோள் புறக்கணிக்கப்படமாட்டாது என்று நான் சொன்னவுடனும், 'புறநகர்' என்று கேட்கத் தேவையில்லை. அகநானூறிலே இருக்கலாம் புறநானூறு இப் போது தேவையில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன, ஸ்ரீவைகுண்டத் திற்காகவா கேட்கப் போகிறீர்கள் ?

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : இல்லை, இல்லை, பொதுவான கேள்விதான், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகாலமாக பல இடங்களிலே காவல் நிலையங்களை அரசு ஆரம்பித்திருக்கிறது. அவை, தனியார் கட்டிடங்களில்—வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருவது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந் திருக்கிறதா? அப்படியென்றால், அவ்வாறு வாடகைக் கட்டிடங்

1990 ஆகஸ்டு 22]

களில் இயங்கி வருகின்ற காவல் நிலையங்களுக்கெல்லாம் விரைவில் சொந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முயற்சி படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் அதனுடைய எண்ணிக்கை பற்றிய குறிப்புகளையும் போலீஸ் மானியக் கோரிக்கையில் விவாதிக்கப் பட்டபோது நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

பேராவூரணியில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் அமைத்தல்

*3575—திரு. ஆர். சிங்காரம் :
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், பேராவூரணியில் சப்-மாஜிஸ் டிரேட் கோர்ட் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணியில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் துவக்க வேண்டுமென்று பன்னெடுங்காலமாகக் கோரிக்கை விடுத்து, அது பரிசீலிக்கப்பட்டு, முடிகின்ற தருவாயில் இருக்கின்றபோது, தற்போது அமைச்சரவர்கள் உண்டு என்று சொல்வாரெனக் கருதி னேன். ஆனால், இல்லை என்று சொல்லி விட்டார்கள். தயவு செய்து, பேராவூரணியில், நம்முடைய தமிழக முதல்வரவர்கள் அறிவித்த 'இன்ஸ்பெக்டர் ஆபீஸ்' கூட சமீபத்தில் துவக்கப்பட் டது—பேராவூரணி மிகப்பெரிய லட்சக்கணக்கான மக்கள்தொகை கொண்ட ஊராகும். அப்படிப்பட்ட அந்த ஊரில் சப்-மாஜிஸ்டி டிரேட் கோர்ட் இல்லாதது பொது மக்களுக்கும், காவலர்களுக்கும் அலுவலர்களுக்கும் மிகப்பெரிய தொல்லையாக இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து, மீண்டும் மறு பரிசீலனை செய்து, சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் ஒன்று துவக்க, அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் தற்போது இயங்கி வருகிற மாவட்ட முன்சீப் கோர்ட் மற்றும் குற்றவியல்